

உடுவில் கிழக்கு கற்பகபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்,
உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட



அமரர்

# நடராசா சிறீகாந்தன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# "நினைவு மலர்"

2020.11.20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



உடுவில் கிழக்கு கற்பகபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம்

ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்த

# அமரர். நடராசா சிறீகாந்தன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 20. 11. 2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சமர்ப்பணம்



அன்பின் உறைவிடமாய்

பாசத்தின் உத்தமனாய்

குடும்பத்தின் ஒளி விளக்காய்

எம் உள்ளத்தில் ஒளி வீசும்

அணையாத தீபமே

விதி வசத்தால் வழி தவறிப்போன

அன்புத் தெய்வத்தின்

இனிய நினைவுகளை

எங்களின் உதிரங்களில் சுமந்து

இம் மலரை அவரின்

திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில் 13. 05. 1950

அமரர்

விண்ணில் 21. 10. 2020

# நடராசா சிறீகாந்தன்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

சார்வரி வருடம் ஐப்பசித் திங்கள் தனில்
பூண்ட சஷ்டித் திதி அதனில்
புதன் எழில் புலர நாதன் திருக்கதவு
திறந்திட ஏகினார் இறைவன் திருப்பாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### தேவாரம்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக் குய்ப்பது
வேத நான்கிலும் மெய்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுத் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்கள்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

வேதநெறித் தழைத்தோங்க
மிகுசைவத் துறை விளங்கப்
பூத பரம்பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலீர்
திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணரவந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே!

# வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் நீங்கவே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் வாழ்க்கைச் சுவடுகள்

ஈழநாட்டின் தலையெனத் திகழும் யாழ் நகரிலே சமயப் பெரியோர்கள் நல்லாளர்கள் பலரை ஈன்றேடுத்த நற்கிராமமாம் உடுவில் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த நடராசா கனகம்மா ஆகியோரின் முதல் புதல்வனாய் 1950ம் ஆண்டு வைகாசி பதின்மூன்றாம் திகதி பிறந்தார். இவர் உடன் பிறந்தவர்களாக சறோஜினிதேவி, சந்திரகாந்தன், றஞ்சினிதேவி(அமரர்), சகுந்தலாதேவி, செல்வக்குமார் ஆகியோர் பிறந்தனர். சகோதரர்களுடன் அன்புடனும் பாசமாக வாழ்ந்து வந்தார்.

இவர் தனது கல்வியினை மானிப்பாய் இந்து கல்லூரியில் பயின்றார். இவர் கல்வியில் சிறந்து விளங்கினார். தமிழிலும் சைவசமயத்திலும் ஆர்வத்துடன் திகழ்ந்தார். தனது தந்தையான சண்முகம் நடராசா அவர்கள் 1977ம் ஆண்டு இவ்வுலகைவிட்டு நீங்கினார்.

தனது தந்தையின் பிரிவினால் கலங்கிய இவர் தனது குடும்பத்தின் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்டார். காலம் சென்ற தந்தையாரின் வேண்டுதலின் பெயரில் கமத்தொழிலில் ஈடுபட்டார். தான் விவசாயியென நெஞ்சை நிமிர்த்தி சொல்லும் பெருமை அவர்முகத்தில் எப்பொழுதும் காணப்படும். விவசாயத்தில் அவர்படிக்காத மேதை, அவருக்குத்தெரியாதது ஒன்றுமே இல்லை விவசாயநிலத்தில் கால் வைத்தால் போதும் பசி, வெயில், மழை எதுவும் மறந்து பயிரை தனது உயிரா நினைத்து அது அறுவடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் காலம் வரை அங்கே காத்திருப்பார் இவ்வாறு விவசாயத்தில் அமவர் ஓர் வீரனாக இருந்தார். தனது குடும்பத்தினரை கரை சேர்த்துவிட்டு 38வது வயதில் (30.01.1988) ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை செல்லம்மா தம்பதியினரின் புதல்வியான இராசேஸ்வரியை கரம் பற்றி இல்லறம் எனும் நல்லறம் நடாத்தி காலத்தில் நற்பயனாக மூத்த ஆண்சிங்கமாக சிவதர்சனை கண்டுமகிழ்ந்தார்கள், இரண்டாவதாக பெண்வாரிசாக துவாரகாவை கண்டுமகிழ்வுறும் வேளையில் மனைவி மீது அளவுகடந்த அன்பாள் கடைக்குட்டி ஆசைமகனாக துஜீவனை கண்டு அகமகிழ்ந்து, மூன்று புத்திரசெல்வங்களையும் கண்ணை இமைகாப்பது போல் காத்து அன்புகடந்த பாசத்தால் கட்டி அரவணைத்து வளர்த்து அவர்கள் கல்வி கற்கவேண்டிய வயது வந்ததும் தானே தனது மிதிவண்டியில் கொண்டுபோய் கல்விகற்பிக்கவைத்து ஏற்றிவருவார். அவரின் பேர்அவாவிற்கு ஏற்றாற்போல் முதல் புதல்வனான சிவதர்சன் யாழ்வாட்டத்தில் மூன்றாம் இடத்தை வணிகப் பிரிவில் பெற்று ஜெயவர்த்தன பல்கலைக்கழகத்துக்கு சென்றார். அவரது (Bsc. Finace Special) பட்டமளிப்பு விழாவின் போது அவரின் கண்களில் மின்னிய பெருமிதம் இவ்வுலகில் ஓர் தந்தையாக தன் கனவு எவ்வளவு மெய்யாகுதோ அவ்வளவு மெய்சிலிர்ப்பு ஏற்பட்டு தன்னையே மறந்து அவர் கண்ணில் ஆனந்த கண்ணீர் தென்பட்டது.

இவ்வாறு பிள்ளைகள் தான் தன் வாழ்வின் உலகம் என அமரர் வாழ்ந்து வரும் வேளையில் தனது செல்லமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வயதை அடைந்ததும் கோண்டாவில் குமரக்கோட்டத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் சரோஜினிதேவியின் மகனான சிந்துஷன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களை திருமணபந்தத்தில் இணைத்து ஊரே போற்றும் அளவிற்கு மிகச்சிறப்பாக திருமண விழா நடாத்தி வைத்தார்.

அமரர் தன் வழக்கமான செயலாக காலையில் எழுந்து பூக்கள் கொய்து சாமிப்படங்களுக்கு சார்த்தி அரைமணித்தியாளம் உட்கார்ந்து தேவாரங்கள் படிப்பார். பின் ஒருநாளும் தவறாது கோவிலுக்கு சென்றுவருவதும். உயரப்புலம் உத்துங்கன் விநாயகர் ஆலயத்தில் கந்தசஷ்டி பூஜை, பிள்ளையார் கதை படித்தல், உபயங்கள் செய்தல், கோவில் நிர்வாகப்பணிகள் என தன்னையை அர்பணித்து தெய்வ நம்பிக்கையுடன் வாழ்ந்து வந்தார்.

இப்படியாக மனைவி மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் என கலகலப்பாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து வரும் வேளையில் விதியின் சதியால் நோய் துரத்தத் தொடங்கியது. பாசத்தின் பிறப்பிடமாக இருந்த அன்பு மனைவியின் அரவணைப்பிலும், பிள்ளைகளின் பாசத்திலும் விநாயகரின் துணையிலும் சிறு நிழலானார். ஆனால் காலனின் கணக்கு ஆரம்பமானது. அகவை 69 முடிந்து 70 ஆகும் போது காலனவன் விட்டு வைப்பானோ என ஏங்கும் வேளையில் அவன் விட்டு வைக்கவில்லை. தனிமையில் தவிக்க விட்டு தன்வசம் கொண்டு செல்ல நினைத்த காலவன் கணபதியின் வேண்டுதலால் மனைவி பிள்ளைகளின் கையில் மலராக கொடுத்துச் சென்று அவரது கணக்கை முடித்து விட்டான். அவரின் இல்லற வாழ்வு முற்றுப்பெற்றது 2020.10.21 அன்று நவராத்திரி தினத்தன்று சொர்க்க வாசல் சென்றடைந்தார்.

அன்னாரின் ஆத்மா இறைவனடி சரணடைய எல்லாம் வல்ல விநாயகரின் துணை நாடி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

மண் ஆண்ட மன்னரும்

சொல் ஆண்ட புலவரும்

வான்புகழ் கொண்ட மாந்தரும்

மாண்டிடுவர் விதிவரின்

உணர்ந்திடுவோம் இவ் உண்மையை

தேற்றிவோம் எம் மனதை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் கதறல்..

நம் மணவாழ்க்கை இனிக்கும்
கரும்பை போல் இன்னும் ஐம்பது வருடம்
வாழ எண்ணினோமே இறுதியில் முப்பதொரு
வருடம் வாழ்ந்து விட்டு தனியே தவிக்க
விட்டு போனீங்களே அப்பா.....

நோய் எனும் கொடியது உங்களை
பற்றி என்னிடம் இருந்து பறித்து
விட்டதே பார்க்கும் இடமெல்லாம்
நீங்களே இருக்கின்றீர்கள்
இனிவரும் காலங்களை எப்படி கழிக்கப்போறேனோ?

எனக்கு தந்தையாக தாயாக
எனை பாதுகாத்து கொண்டிங்களே
வீட்டுக்கு தேவையானதை பார்த்து பார்த்து
வாங்கி வந்து விடுவீங்களே
எனக்கு சுகந்திரத்தை தந்து
எனக்கு எல்லாமாக இருந்து விட்டு
இப்படி தனியாக விட்டு போனீங்களே....
நீங்கள் இல்லாமல் வாழ எனக்கு சொல்லி
தராமல் போய் விட்டீங்களே.........

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**உற்ற மனைவியின் தாங்கனா துயரம்**

சி.இராசேஸ்வரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் ஆற்றனா துயரம்..

**அப்பா! அப்பா!! அப்பா!!!**
யாரை அழைப்பது இனி
ஒரு சொல் கேட்டவுடன் ஓம்
என்றீர்கள் இன்று பலமுறை
அழைக்கின்றோம் மௌனமாய்
இருக்கிறீங்களே......

அம்மா பத்துமாதம் சுமந்ததை விட காலம் முழுக்க
எங்களை சுமந்து காத்து நின்ற தெய்வம்
தூசி கூட எங்களை தொடவிடாமல்
கண்ணை இமைகாப்பது போல் எமை அடைகாத்தீங்களே
நோய் ஏதும் வராமல் கண் விழித்து
தொட்டு தொட்டு பாதுகாத்தீங்களே
உங்களுக்கு நிகர் இம் மண்ணில் ஏது அப்பா

நாங்கள் உண்டபின்பு தான்
நீங்கள் உணவு உண்பீர்களே
ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் எனது குரல்
கேட்டபின்பு தான் உறங்க செல்வீர்களே
வர கொஞ்சம் தாமதம் ஆனால்
தவித்துக்கொண்டு வந்து வாசலில் காத்திருப்பீங்களே....
இனியாம் எங்குகாணப்போறம் இந்த அளவுகடந்த பாசத்தை
இனி எங்கே உங்களை காண்பது
எங்களை விட்டு எங்கே போனீங்கள் அப்பா........



*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பிள்ளைச் செல்வங்களின் பரிதவிப்பு

சிவதர்சன், துவாரகா, துஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்லினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்
நிஷ்டையுங்கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.



குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

நிலை மண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும்செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக்காக்க என்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசகன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறு இடும் வேலவன் நித்தம் வருக!
சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவன பவச! ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடியாறும்
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகனென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவில் சரஸ்வதி நற்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தம்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ச தரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகேட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு உடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித் தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிவிட விசங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனிவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என்வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்வாய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தா சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்ற ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்ன குழந்தை சேவடி போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்தர் சஷ்டி கவசம்
முற்றிற்று.



## வாழ்க்கையில் வெற்றிபெற

அன்பு காட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து விடாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சப்படாதே
வீரமாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகி விடாதே
பொருளைத் தேடு ஆனால் பேராசைப்படாதே
நம்ப நட ஆனால் நம்பி விடாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறந்து விடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

இப் புவியில் மானுடராகப் பிறந்தோர் சுற்றம் சூழ உறவுகளால் போற்றப்பட்டு வாழ்வியலில் பயன்தரு பெருவிருட்ஷமாக "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர் ஊன்றி" என்றவாறு மறைந்த அமரர் நடராசா சிறீகாந்தன் அவர்கள் புகளோடு தான் தோன்றிய நாட்டு மக்களுக்காக சேவை ஆற்றி முதுமை வரவேற்க சிவன்பால் சித்தம் கொண்டு விண்ணுலகம் சென்று ஆத்மா சாந்தி அடையட்டும்.

சாந்தி ஓம் சாந்தி


**பெருமைக்குரிய பொன்மகனார்**

அரியது கேட்கிவரிவடி வேலோய்
அரிது அரிது மானடராதல் அரிது
மானுடராயினும் கூன், குருடு, செவிடு, போடு
நீங்கிப் பிறத்தல் அரிது கூன் குருடு
செவிடு நீங்கி பிறந்த சாலை தானமும்
தவமும் தான் செய்தல் அரிது
தானமும் தவமும் நான் செய்வாராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே.

என்று ஔவையார் சிறப்புற எடுத்து இயம்புகின்றார். இந்த ஔவையாருடைய கூற்றுக்கு அமைவாக சிறீ அண்ணா அவர்கள் உடுவில் கற்பக பிள்ளையார் கோயிலடியில் பிறந்தாலும் உயரப்புலம் உத்துங்க விநாயகருடைய மீழா அடியவர் மட்டுமல்லாது நிர்வாக சபையிலும் பல வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்து ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். அவருடைய பிள்ளைகளும் அவரைப் போலவே மிகவும் ஒழுக்கமானவர்களாக வழி நடாத்தி உயர்ந்த நிலையை அடையவைத்துள்ளார். சிறீ அண்ணாவைத் தொடர்ந்து அவருடைய பிள்ளைகளும் அவருடைய வழியிலேயே செயற்பட்டு இந்த நாட்டு மக்களுக்கு நன்மையே செய்ய வேண்டும் அப்போது தான் அவருடைய ஆத்மா சாந்தி அடையும் என்று எல்லாம் வல்ல உத்துங்கவிநாயகப் பெருமான் பாதம் பணிந்து போற்றுகின்றேன்.

**சிவஸ்ரீ . இ.சுதர்சனக்குருக்கள்**

**சுதுமலை.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் துணைவியாரோடு



அடிக்கல் நாட்டுமிடத்து



ஆலய திருவிழாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரப்புலம் உந்துங்கன் விநாயகர் ஆலய பரிபாலன சபை தலைவரின் உள்ளத்தில் இருந்து

**அமரர் ஆலய திருப்பணிக்கு பலவழிகளிலும் உதவிய பெருந்தகை**

உயரப்புலம் உந்துங்க விநாயகர் ஆலயத்தின் திருப்பணிச்சபை உறுப்பினர் திரு. நடராசா சிறீகாந்தன் காலமான செய்தியை அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம் எமது ஆலயத்தில் 2012 ம் ஆண்டு சித்திரத்தேர், தேர் தரிப்பிடம் உட்பட பல திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற்ற காலத்தில் அமரர் சிறீகாந்தன் பலவழிகளிலும் தன்னாலான பல உதவிகளை செய்து திருப்பணி சிறக்க உதவியதை மறக்கமுடியாது. அன்னாரின் இழப்பானது குடும்பத்தாருக்கு மட்டுமன்றி எமது ஆலயத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா உயரப்புலம் உத்துங்க விநாயகரின் பாதங்களில் சாந்திபெற வேண்டுவதோடு அன்னாரின் பிரிவால் வாடி நிற்கும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்



**இ.அருணகிரி**

**தலைவர்**

**உயரப்புலம் உத்துங்கன் விநாயகர்**

**ஆலய பரிபாலன சபையினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நாட்டம் கொண்ட ஓர் அற்புத மனிதர்...

**அமரர் கடவுள் மீது மிகுந்த பக்தி கொண்டவர்**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் நடராசா ஸ்ரீகாந்தனது மறைவு அவரது குடும்பத்தவர்களுக்கு மாத்திரமின்றி அயலவர்கள், எமது கிராமத்தவர்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும். அமரர் நடராசா ஸ்ரீகாந்தன் அவர்கள் மனைவிக்கு நல்ல கணவராகவும், பிள்ளைகளுக்கு சிறந்த தந்தையாகவும், அயலவர்களுக்கு உற்ற நண்பனாகவும் இருந்து வந்துள்ளார். தன்னுடைய பிள்ளைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டு அவர்களை கல்வியிலே துலங்கச் செய்தவர். நல்லதொரு விவசாயியாக இருந்து கடுமையான உழைப்பின் மூலம் சிறப்பாக வாழ்ந்து காட்டியவர்.

எமது கிராமத்திலுள்ள சமூகமட்ட அமைப்புக்களான கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், உத்துக்க விநாயகர் ஆலயம் போன்றவற்றின் நிர்வாகத்தில் பொறுப்பான பதவிகளை வகித்து திறம்பட செயற்பட உதவியவர். எல்லாவற்கும் மேலாக சமூகநாட்டம் கொண்ட ஒரு நல்ல மனிதனை நாம் இழந்து விட்டோம் அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*



A.V.**கணேசலிங்கம்**

**ஓய்வு நிலை கோட்ட கல்விப்பணிப்பாளர்**

**ஆனைக்கோட்டை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயரப்புலம் கிராமத்துக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு

**எனது நண்பர் திரு. நடராசா ஸ்ரீகாந்தன்**

என்ற ஓர் புனித நண்பன் காலமாகி விட்டார் என்ற துயரசெய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த துயரமும் அடைந்தேன் இவர் கடந்த 35 வருடங்களுக்கு முன் இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் 1988ம் ஆண்டளவில் என ஞாபகம் உடுவில் கிழக்கு கற்பக பிள்ளையார் கோவிலடியில் இருந்து ஆனைக்கோட்டை உயரப்புலம் என்ற கிராமத்தில் திருமணம் செய்த காலத்தில் இருந்து எனக்கு நன்கு அறிமுகமாகி இக்கிராமத்தின் அபிவிருத்தியில் இருவரும் இணைந்து செயற்பட்டோம்.

அமரர் சிறீகாந்தன் "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்ற முதுமொழிக்கு அமையவும் தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கு இனங்கி அரசதொழிலை அறவே வெறுத்து சிறப்பாகவும் சுகந்திரமாகவும் வாழ்வதற்கு விவசாயத்தொழிலை தேர்தேடுத்து அதில் ஆர்வத்துடன் இளம் வயதில் இருந்தே ஈடுபட்டு விவசாய மன்னாக திகழ்ந்தார். இவர் எமது கிராமத்துக்கு வந்த பின் இங்குள்ள பொதுஅமைப்புக்களில் தன்னை ஈடுபடுத்தி கிராமத்தின் அபிவிருத்தியில் அயராது உழைத்தார். உயரப்புல பாரதி சனசமூக நிலையத்தின் தலைவராக நான் இருந்த காலங்களில் அமரர் ஸ்ரீகாந்தன் கௌரவ செயலாளராக இருந்து நிலைய புனரமைப்பு, தளபாட கொள்வனவு, மற்றும் கடைக்கட்டிடம் பொது விழாக்களிலும் அன்னார் ஆற்றிய சேவைகளை எவரும் மறக்க முடியாது.

எல்லோரும் இவரை "சிறீ" என்று தான் அன்பாக அழைப்பார்கள் இவர் தனது மூன்று பிள்ளைச்செல்வங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டான காலகட்டத்திலும் நல்ல கல்வி புகட்ட வேண்டி பல கஷ்டங்களையும். அனுபவித்து தனது செல்வங்களை நல்ல கல்வி புகட்டி வெற்றி கண்டுள்ளார். அமரரின் மூத்த புதல்வன் சிவதர்ஷன் கா.பொ.த (உ.த) பரீட்சையில் யாழ் மாவட்டத்திலே முதல்தர சித்திபெற்றதை பாராட்டி சனசமூக நிலையம் எடுத்த விழாவில் மிகவும் மகிழ்வடைந்தார்.

அமரர் ஸ்ரீகாந்தன் ஓர் விநாயக பக்தர் இவர் உடுவில் கற்ப பிள்ளையார், உயரப்புலம் உத்துங்க விநாயகர், பழைய வளவுப் பிள்ளையார் ஆகிய தெய்வங்களில் அளவுகடந்த பற்றாளர். எனினும் இவர் தனது வீட்டுக்க அருகில் உள்ள அன்னை அடைக்கல நாயகி தேவாலய மாதாவை வழிபட தவறுவதில்லை. மேலும் உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபை, திருப்பணி சபை போன்ற நிர்வாகத்தில் கடமையாற்றி ஆலய முன்னேற்றத்திற்கு உழைத்துள்ளார்.

அமரர் "சிறீ" தமிழ் உணர்ச்சியள்ளவர் மக்களை ஆழமாக நேசித்த சகலருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகியவர் தனது அன்பு மனைவியிலும் பாசம் நிறைந்த பிள்ளைகளிலும் மருமகன் மீதும் அன்புள்ளம் கொண்டவர். இவர் சொல்லிலும் செயலிலும் எவரையும் புண்படுத்தாத நல்ல மனிதர். இவரின் இழப்பு இவரின் குடும்பத்திற்கு மாத்திரம் இன்றி உயரப்புலம் கிராமத்துக்கும் ஓர் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இருகரம் கூப்பி பிரார்த்திக்கின்றோம்.



*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*


**ஆ.சி.கணேசவேல் J.P (அகில இலங்கை)**
**உபதவிசாளர் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
1950 . 05 . 13

இறப்பு
2020 . 10 . 21

அமரர்

## நடராஜா ஸ்ரீகாந்தன்

அவர்கள்

எம் இதயம் நோகும் இரங்கல் செய்தியை இடியாய் தந்தவரே
பூமியில் உன்னைபோல் புனிதரைப் பறிப்பது
நாம் வாழும் போதினில் நரகத்திற்கொப்பையா
ஈரம் கசிந்திடும் எம்மிரு கண்ணிலும்
உயிரும் கசிந்திடும் உண்மை அறிவியோ?
உன் நினைவுகள் எமை விட்டு என்றென்றும் மறையாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
13 . 05 . 1950

மறைவு
21 . 10 . 2020



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் கணக்குக்கிளையில் பணியாற்றும்
சிந்துஷன் அவர்களின் மாமனார்

## அமரர் நடராஜா ஸ்ரீகாந்தன்

கண்ணீர் குருதிகளாய் பாய்கின்றன
கதறி நிற்கின்றதோ நெஞ்சம்
காயங்கள் பல இருந்தாலும் கனவுகள் பல இருந்தாலும்
கடவுளின் அழைப்போ கரையில்லாதது
ஒரு நிமிடம் நினைக்காது அனைவரையும் விட்டுச் சென்றீரே
ஆறாத நெஞ்சங்கள் அழுகிறதோ
உங்கள் குடும்பம் ஆயினும் மறையாத உங்கள் பிரிவின் காயங்கள்
ஆறிட வேண்டும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!!

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்

22.10.2020

Luxmy Computers - 0212251190




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1950 . 05 . 13

இறப்பு 2020 . 10 . 21



அமரர்

## நடராஜா ஸ்ரீகாந்தன்

அவர்கள்

எம் இதயம் நோகும் இரங்கல் செய்தியை இடியாய் தந்தவரே

பூமியில் உன்னைபோல் புனிதரைப் பறிப்பது

நாம் வாழும் போதினில் நரகத்திற்கொப்பையா

ஈரம் கசிந்திடும் எம்மிரு கண்ணிலும்

உயிரும் கசிந்திடும் உண்மை அறிவியோ?

உன் நினைவுகள் எமை விட்டு என்றென்றும் மறையாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்

**ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயம்**

**பாரதி சனசமூக நிலையம்**

**உயரப்புலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
1950 . 05 . 13

இறப்பு
2020 . 10 . 21

அமரர்

## நடராஜா ஸ்ரீகாந்தன்

அவர்கள்

எம் இதயம் நோகும் இரங்கல் செய்தியை இடியாய் தந்தவரே
பூமியில் உன்னைபோல் புனிதரைப் பறிப்பது
நாம் வாழும் போதினில் நரகத்திற்கொப்பையா
ஈரம் கசிந்திடும் எம்மிரு கண்ணிலும்
உயிரும் கசிந்திடும் உண்மை அறிவியோ?
உன் நினைவுகள் எமை விட்டு என்றென்றும் மறையாது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்


**சுஜீவனின் நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்து எம்மை மீளாத்துயரில்
ஆழ்த்தி விட்டு மீளாத்துயில்
கொண்ட எம் குடும்பத் தலைவர்
அமரர் நடராசா சிறீகாந்தன்.



அவர்களின் இறுதிக் கிரியைகளின் போது சமூகமளித்து ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தவர் களுக்கும் அத்துடன் இன்று நடைபெறும் ஆத்மா சாந்திக் கிரியைகளில் பங்கு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் சிரம் தாழ்த்திய நன்றிகள்.



**இப்படிக்கு**


**உங்கள் நன்றி மறவாத**

குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org